THE HINDU - ENGLISH

Dated: 14.01.2025

# Meta CEO's description of Lok Sabha election result is 'misinformation': Minister

**The Hindu Bureau**
NEW DELHI

Union Information and Broadcasting and Electronics and Information Technology Minister Ashwini Vaishnaw on Monday accused Meta founder and CEO Mark Zuckerberg of furthering "misinformation" with his characterisation of the 2024 Lok Sabha election as a loss for the "incumbent" government.

"People of India reaffirmed their trust in NDA [National Democratic Alliance] led by PM @narendramodi Ji's leadership," Mr. Vaishnaw said.

In an almost three-hour discussion on the popular Joe Rogan Experience podcast, Mr. Zuckerberg said: "I kind of think that the reaction to COVID probably caused a breakdown of trust in a lot of governments around the world... 2024 was a big election year around the world, and there are all these countries, India, just like a ton of countries that had elections... And the incumbents basically lost every single one."



Ashwini Vaishnaw

This was the only time in the interaction that Mr. Zuckerberg mentioned India in the conversation.


"Mr. Zuckerberg's claim that most incumbent governments, including India in 2024 elections, lost post-COVID is factually incorrect," Mr. Vaishnaw said on X.

"From free food for 800 million, 2.2 billion free vaccines, and aid to nations worldwide during COVID, to leading India as the fastest-growing major economy, Prime Minister Narendra Modi's decisive third-term victory is a testament to good governance and public trust."

"@Meta, it's disappointing to see misinformation from Mr. Zuckerberg himself," Mr. Vaishnaw said. "Let's uphold facts and credibility."

A Meta spokesperson did not have an immediate comment on Mr. Vaishnaw's response when contacted on Monday evening.

D.T. NEXT
Dated: 14.01.2025



'Paanai' Mani arriving to file nomination on Monday

# 6 more file papers to contest bypoll for Erode East

COIMBATORE: After AIADMK and BJP stepped out of the race in the Erode East bypoll, six more candidates filed their nomination on Monday, taking the tally to nine.

Little-known Marumalarchi Janata Katchi state general secretary Anand (40) of Dharmapuri, A Mani alias 'Paanai' Mani (80), an MGR Makkal Katchi functionary from Ramanathapuram and four other independent candidates - Rajasekar (67) of Salem, Gopalakrishnan (33) of Sanjay Nagar, Isakki Muthu of Chennai and Muhammed Kaibeer (51) of Erode - filed their nominations.

'Paanai' Mani came with a plastic pot on his head to file his nomination. "I am contesting for the 26th time. I aim to win the polls to fulfil all basic amenities of people," he said.

With the fresh set of nominations, nine persons have filed their nominations to contest the by-polls as three independents, including 'election king' K Padmarajan, Noor Muhammed and an ex-army officer, filed their nominations on day one.

DMK candidate VC Chandrakumar is expected to file the nomination on January 17, the final day for filing nominations. Ganasangam Party of India candidate Dharmalingam picked up an argument with police after he was denied entry to file the nomination as he turned up late. NTK candidate is yet to be announced.

HINDU- TAMIL
Dated: 14.01.2025

# இரட்டை இலை சின்னம் பழனிசாமிக்கு வழங்க கூடாது பெங்களூரு புகழேந்தி பதில் மனு

சென்னை

முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு அதிமுகவில் எந்த அதிகாரத்தையும், இரட்டை இலை சின்னத்தையும் வழங்கக்கூடாது என பெங்களூரு புகழேந்தி தேர்தல் ஆணையத்தில் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாகவும், இரட்டை இலை சின்னம் தொடர்பாகவும் பெங்களூரு புகழேந்தி தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்துள்ள பதில் மனு: ஏற்கெனவே நடந்த ஈரோடு இடைத்தேர்தல் நேரத்தில் இரட்டை இலை சின்னம் தொடர்பாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக இரட்டை இலை சின்னத்தை நாடாளுமன்ற தேர்தல் நேரத்திலும் பழனிசாமிக்கு வழங்கி தேர்தல் ஆணையம் தவறு செய்துள்ளது. இதன்மூலம் உச்ச நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே தேர்தல் ஆணையத்துக்கு எதிராக டெல்லி உயர் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டு, எனது மனுவை பரிசீலிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இனியும் தேர்தல்ஆணையம் தவறான முடிவை எடுத்தால் மீண்டும் அவமதிப்பு வழக்கு தொடர நேரிடும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

DAILY THANTHI
Dated: 14.01.2025

நாடாளுமன்ற தேர்தல் முடிவு பற்றிய

# 'பேஸ்புக்' நிறுவனர் கருத்துக்கு மத்திய மந்திரி பதிலடி

புதுடெல்லி, ஜன.14-

கொரோனாவுக்கு பிறகு 2024-ம் ஆண்டு நடந்த தேர்தல்களில், இந்தியா உள்பட பெரும்பாலான நாடுகளில் பதவியில் இருந்த அரசுகள் தோல்வியடைந்தன என்று 'பேஸ்புக்' சமூகவலைத்தள நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் கூறியதாக தகவல்கள் வெளியாகின. இதற்கிடையே, அவரது கருத்துக்கு மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் பதிலடி கொடுத்துள்ளார். அஸ்வினி வைஷ்ணவ் தனது 'எக்ஸ்' பக்கத்தில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவில், 64 கோடிக்கு மேற்பட்ட வாக்காளர்கள் 2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் வாக்களித்தனர். பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மீது இந்திய மக்கள் தங்களது நம்பிக்கையை உறுதி செய்தனர். பிரதமர் மோடி 3-வது தடவையாக வெற்றி பெற்றது, நல்லாட்சிக்கும், மக்களின் நம்பிக்கைக்கும் அடையாளம். எனவே, இந்தியா உள்ளிட்ட நாடுகளில், பதவியில் இருந்த அரசுகள் தோல்வியடைந்ததாக மார்க் ஜுக்கர்பெர்க் கூறியது தவறான கருத்து. அவரிடம் இருந்தே தவறான தகவல் வருவது ஏமாற்றம் அளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DAILY THANTHI
Dated: 14.01.2025

## ஈரோடு கிழக்கு தொகுதியில்

# மேலும் 6 பேர் வேட்புமனு தாக்கல்

ஈரோடு, ஜன.14-
ஈரோடு கிழக்கு தொகுதியில் நேற்று மேலும் 6 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

### வேட்புமனு தாக்கல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 10-ந் தேதி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் தொடங்கியது. தேர்தல் மன்னன் பத்மராஜன், நூர் முகமது, மதுரை விநாயகம் ஆகிய 3 பேர் சுயேச்சையாக வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்தநிலையில் 2-வது நாளாக நேற்று காலை 11 மணிக்கு வேட்புமனு தாக்கல் தொடங்கியது.

### மேலும் 6 பேர்

மறுமலர்ச்சி ஜனதா கட்சியின் சார்பில் மாநில பொதுச்செயலாளரும், தர்மபுரி பீடமனேரி செட்டிகாலனியை சேர்ந்தவருமான ஆனந்த் (வயது 40), எம்.ஜி.ஆர். மக்கள் கட்சி சார்பில் ராமநாதபுரம் மாவட்டம் சோழந்தூரை சேர்ந்த அ.மணி என்கிற பானை மணி (80) என்பவரும் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். இதேபோல் சுயேச்சை வேட்பாளர்களாக சேலம் தாதகாப்பட்டியை சேர்ந்த ராஜசேகர் (67), ஈரோடு அருகே 46 புதூர் சஞ்சய்நகரை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (33), சென்னை நடேசன் நகரை சேர்ந்த இசக்கிமுத்து, ஈரோடு சம்பந்தர் வீதியை சேர்ந்த முகமது கைபீர் (51), ஆகிய 4 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

இதன்படி நேற்று ஒரே நாளில் 6 பேர் மனு தாக்கல் செய்தனர். மேலும், ஏற்கனவே வேட்புமனு தாக்கல் செய்திருந்த கோவை சுந்தராபுரத்தை சேர்ந்த நூர்முகமது (67) என்பவர் தனது 2-வது மனுவை தாக்கல் செய்தார். இந்த இடைத்தேர்தலில் போட்டியிட இதுவரை 9 வேட்பாளர்கள் மொத்தம் 10 வேட்புமனுக்களை தாக்கல் செய்து உள்ளனர்.

### தி.மு.க. வேட்பாளர்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று (செவ்வாய்க்கிழமை), நாளை (புதன்கிழமை), நாளை மறுநாள் (வியாழக்கிழமை) என 3 நாட்கள் விடுமுறை என்பதால் வேட்புமனு தாக்கல் நடைபெறாது. வருகிற 17-ந் தேதி வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். அன்றைய தினம் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உள்ளிட்டோர் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் யார்? என்று இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவிக்கப்படும் என்று அந்த கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்து உள்ளார்.

### தாமதமாக வந்தவருக்கு அனுமதி மறுப்பு

நேற்று மதியம் இந்திய கண சங்கம் என்ற கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தர்மலிங்கம் என்பவர் வேட்புமனு தாக்கல் செய்ய வந்தார்.

ஆனால் காலதாமதமாக வந்ததாக, பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் வேட்பு மனு தாக்கல் செய்ய அவருக்கு அனுமதி மறுத்துவிட்டனர். இதனால் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் பின்னர் தர்மலிங்கம் வேட்புமனு தாக்கல் செய்யாமல் திரும்பி சென்றார்.

### தலையில் குடத்துடன் வந்த வேட்பாளர்

எம்.ஜி.ஆர். மக்கள் கட்சி சார்பில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அ.மணி என்கிற பானை மணி காலிகுடத்தில் மஞ்சள் குலை வைத்து தலையில் சுமந்தபடி வேட்புமனு தாக்கல் செய்ய வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## அ.தி.மு.க.வின் திருத்தப்பட்ட விதிகள் ஏற்பு:

# தேர்தல் கமிஷனுக்கு எதிரான வழக்கு 20-ந்தேதிக்கு தள்ளிவைப்பு

### டெல்லி ஐகோர்ட்டு உத்தரவு

புதுடெல்லி, ஜன.14-
எடப்பாடி பழனிசாமியை பொதுச்செயலாளராக அங்கீகரித்த, அ.தி.மு.க.வின் திருத்தப்பட்ட விதிகளை ஏற்ற தேர்தல் கமிஷனின் நடவடிக்கைக்கு எதிராக ராம்குமார் ஆதித்தன், கே.சி.சுரேன் பழனிசாமி ஆகியோர் டெல்லி ஐகோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுவை நீதிபதி ஜோதி சிங் விசாரித்தார். மனுதாரர் சார்பில் வக்கீல் யோகேஸ்வரன் ஆஜராகி வாதிட நேரம் கேட்கப்பட்டது.

எடப்பாடி பழனிசாமி சார்பில் வக்கீல் பாலாஜி சீனிவாசன் ஆஜராகி, இந்த விவகாரத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை ஐகோர்ட்டு கடந்த 19-ந்தேதி தள்ளுபடி செய்துள்ளது. கட்சியில் உறுப்பினராக இல்லாதவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்குகளுக்கு எதிராக அ.தி.மு.க. சார்பில் ரிட் மனு செய்யப்பட்டு உள்ளது. சென்னை, டெல்லி ஐகோர்ட்டுகளில் இது போன்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிட்டார்.

தேர்தல் கமிஷன் சார்பில் ஆஜரான வக்கீல், இந்த மனு விசாரணைக்கு உகந்ததல்ல. எந்தவொரு உள்கட்சி ஜனநாயகத்தையும் தேர்தல் கமிஷன் கட்டுப்படுத்தாது. எனவே, விசாரணைக்கு உகந்ததா என்பது குறித்து விசாரிக்கவேண்டும் என வாதிட்டார்.

வாதத்தைப் பதிவு செய்து கொண்ட டெல்லி ஐகோர்ட்டு, விசாரணையை வருகிற 20-ந்தேதிக்கு தள்ளி வைத்ததுடன், இந்த விவகாரத்தில் சென்னை ஐகோர்ட்டு உத்தரவின் நகலை தாக்கல் செய்யவும் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு உத்தரவிட்டுள்ளது.

DINAMALAR
Dated: 14.01.2025

# சீமான் பிரசாரத்திற்கு இடையூறு தேர்தல் அதிகாரியிடம் புகார்

**சென்னை, ஜன. 14–**

'ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், சீமான் பிரசாரத்திற்கு இடையூறு விளைவிக்க திட்டமிட்டுள்ள காங்கிரஸ் கட்சியினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் மனு கொடுக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, நாம் தமிழர் கட்சியினர் அளித்த மனு:

அடுத்த மாதம், 5ம் தேதி இடைத்தேர்தல் நடக்க உள்ளது. இதில், நா.த.க., சார்பில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து, தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தொடர் பிரசாரத்தில் ஈடுபட உள்ளார். அதற்காக, முறையான அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில், 12ம் தேதி நடந்த ஆலோசனை கூட்டத்தில், 'ஈரோடு கிழக்கு தொகுதிக்கு சீமான் வரும் போது, அவரை பேச விடாமல் எதிர்ப்பு தெரிவிப்போம்' என, மாவட்ட காங்கிரஸ் பொறுப்பாளர் ராஜன் தெரிவித்துள்ளார்.

மக்களாட்சி அங்கீகரிக்கப்பட்ட நாட்டில், மாநில கட்சி தலைவருக்கு இடையூறு விளைவிப்போம் என்று கூறுமளவுக்கு, தேர்தல் ஜனநாயகம் கேள்விக்குள்ளாகி உள்ளது.

எனவே, காங்கிரஸ் கட்சியினர் மீது தேர்தல் நடத்தை விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், சீமான் உட்பட, நா.த.க.,வினருக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.